Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.III. TIRUPATTUR
Case No. CC .NO. 166/2019
DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No.1 , Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. ரங்கசாமி | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | திரு.ரத்தினவேல் | தொழில் | கூலி |
| கிராமம் | பச்சூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 81 |

| | |
|---|---|
| எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை. | 1 -4 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 24th day of October 2025

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகளை தெரியும். அவர்கள் வெளியூர்காரர்கள். அவர்கள் இன்று ஆஜராகி இருந்தால் அவர்களை என்னால் அடையாளம் காட்ட இயலும். எதிரிகளுக்கும் எனக்கு நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்தது. நான் உரிமையியல் வழக்கு தொடுத்து எனக்கு ஆதரவாக தீர்ப்பானது. கடந்த 01.02.2019 அன்று காலை 07.30 மணிக்கு நான் என் வீட்டின் முன்பு நின்றபோது, திடீரென்று வந்த இவ்வழக்கின் எதிரிகள் நால்வரும் சேர்ந்து கட்டையால் என்னை, என் வலது கை மணிக்கட்டிலும், இடது காலிலும், தலையிலும் தாக்கி காயம் ஏற்படுத்தினார்கள். மேலும், தேவிடியா பையா என்று என்னை பார்த்து 1,2,4 எதிரிகள் அசிங்கமாக திட்டினார்கள். நான் கீழே விழுந்துவிட்டேன். சென்னப்பன் என்பவருக்கு தகவல் தெரிவித்தேன். அ வர் வந்து என்னை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று அதன் பின்னிட்டு திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தேன். எனக்கு தலையில் ஏற்பட்ட காயத்திற்கு தையல் போட்டார்கள். வலது கையில் ராடு வைத்து ஆபரேசன் செய்தார்கள். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையது தான். எனது வலது கையில் காயம் ஏற்பட்டிருந்ததால் என்னைால் கையொப்பம் இட இயலவில்லை என்பதால் கைரேகை வைத்தேன். **( அந்த**

**புகார் வாக்குமூலம் என்னால் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** என்னிடம் காட்டப்படும் கட்டைகள் தான் ( எண்ணிக்கை –2) எதிரிகள் என்னை தாக்க பயன்படுத்திய கட்டைகள் ஆகும். **(அந்த கட்டைகள் அ.சா.பொ 1,2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தனர். வழக்கு நிலுவையில் இருக்கும் போது எதிரிகள் மீண்டும் வந்து பிரச்சனை செய்தார்கள். அதற்கு நான் தனியாக புகார் அளித்துள்ளேன்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் மீதுள்ள முன்விரோதத்தின் காரணமாக எதிரிகள் மீண்டும் பிரச்சனை செய்வதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் என் பக்கத்து வீட்டுகாரர்கள் என்றால் சரியல்ல. அவர்கள் சிவனாபுரம் கிராமத்தை சேர்ந்தவர்கள் ஆவார்கள். எங்கள் ஊரில் எதிரிகளுக்கு வீடில்லை. என் வீட்டிற்கு பக்கத்துவீட்டுகார்கள் தான் எதிரிகள் என்றாலும், அவர்கள் நிலத்தை அபகரிக்க வேண்டி நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் வீட்டிற்கு பக்கத்தில் உள்ள நிலத்தில் எதிரிகள் கொட்டாய் மட்டும் போட்டுள்ளார்கள். அவர்களுக்கு அங்கு வீடில்லை. எதிரிகள் போட்ட கொட்டகையை எடுப்பதற்காக உரிமையியல் வழக்கும் காவல்நிலையத்தில் புகாரும் கொடுத்துளேன் என்றால் கொடுத்துள்ளேன். நான் கூறுவது போல் புகார் ஏதும் அளிக்கவில்லை என்றாலும், நீதிமன்றத்தில் வழக்கு தொடரவில்லை என்றாலும் சரியல்ல. 4 நபர்கள் தாக்கியதாக தான் புகாரில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். காயம்பட்ட என்னை சென்னப்பன் என்பவர் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார். அப்போது போலீசாரிடம் நடந்ததை சொன்னேன் என்றால் சரிதான். நான் தெரிவித்த விவரங்களை அப்போது போலீசார் எழுதி கொண்டார்களா என்றால் எழுதி கொண்டார்கள். அதில் நான் காவல் நிலையத்தில் வைத்து கைரேகை வைத்தேன். அந்த கைரேகை தான் தற்போது என்னிடம் காட்டப்பட்ட அ.சா.ஆ 1 ல் உள்ள கைரேகை என்றால் சரிதான். அந்த புகாரில் 4 நபர்கள் என்னை கட்டையால் தாக்கியதாகதான் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். அதன்பின்னிட்டு போலீசார் என்னிடம் வேறு கைரேகை வாங்கவும் இல்லை நான் எங்கும் இடவில்லை என்றாலும் சரிதான். மருத்துவர் என்னை விசாரித்தபோது 4 நபர்கள் தாக்கியதாக தான் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கு சாட்சிகளை நான் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றேனா என்றால் இல்லை. சம்பவசமயத்தில் என் அண்ணன் மகனை தவிர வேறு ஆட்கள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள் ஆனால் யார் என்று எனக்கு குறிப்பிட்டு நினைவில்லை. மருத்துவமனையில் சிகிச்சை முடித்து நான் திரும்பியபோது சம்பவயிடததில் இருந்த கண்ணுற்ற சாட்சிகள் யார் என்று போலீசாருக்கு நான் தெரிவித்தேன் என்றால் சரிதான். அந்த சாட்சிகளையும் போலீசார் விசாரித்தார்கள் என்றால் சரிதான். என்னை 4 நபர்கள் உருட்டு கட்டையால் தாக்கியதாக போலீசார் விசாரணையில் தெரிவித்தேன் என்றால் சரிதான். அ.சா.பொ. 1,2 உருட்டு கட்டை இல்லை என்றாலும், ரீப்பர்

கட்டைகள் என்றாலும் சரிதான். வழக்கிற்காக நானும், போலீசாரும் சேர்ந்து தயார் செய்த சான்று பொருட்கள் அ.சா.பொ 1,2 என்றால் சரியல்ல. முதலில் நான் 2 நபர்கள் மீது புகார் அளித்து விட்டு பின்பு மீண்டும் 4 நபர்கள் என்று பொய்யாக புகார் அளித்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், நான் கூறுவது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. சம்பவதினத்தன்று நான் கழிவறைக்கு சென்றேன் என்றால் சரிதான். அவ்வாறு கழிவறைக்கு சென்றபோது கீழே விழுந்து தாமாக ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகள் மீதுள்ள முன் விரோதத்தின் காரணமாக பொய்யாக இவ்வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

| | |
|---|---|
| Signature of Witness | Judicial Magistrate No.III(FAC)<br>Tirupathur. |